# காவடியாம் காவடி கந்தவேலன் காவடி

## காவடியும் அதன் வரலாறும்:

தமிழ்க் கடவுளாகிய முருகனை நாம் குமரன், கந்தன், வேலன் எனப் பல்வேறு பெயர்களில் அழைத்து வருகிறோம். **"முருகு"** என்ற சொல்லுக்கு **"அழகு"** என்று பொருள். ஆகவே **"முருகன்"** என்றால் **"அழகன்"** என்று பொருள். முருகன் என்றாலே இனிமை எனலாம். அப்படிப்பட்ட முருகனுக்கு பக்தர்கள் தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட முருகனுக்கு உகந்த நாட்களில் காவடி எடுத்துச் சென்று வழிபடுவது மரபு. அந்த காவடியின் புராண கதை என்ன? நாம் ஏன் முருகனை மட்டும் காவடி எடுத்து வணங்குகிறோம்?

அகஸ்திய முனிவரின் சீடர்களில் ஒருவர் இடும்பன். ஒருமுறை அகஸ்தியர் இடும்பனை அழைத்து, முருகன் வழிபாட்டிற்காக கைலாயம் சென்று அங்குள்ள கந்த மலையில் உள்ள சிவகிரி, சக்திகிரி ஆகிய இரண்டு சிகரங்களை தான் இருக்கும் தெற்குப்பகுதிக்கு கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அகஸ்தியரின் கட்டளைப்படி இடும்பனும் கயிலை சென்று சிவசக்தியை வணங்கி, அங்கிருந்த இரு மலைகளை இருபுறமும் தொங்கவிட்டபடி காவடியாக கட்டி எடுத்து வந்தார்.

இடும்பனுக்கு அருள் புரியும் பொருட்டும், திருவாவினன்குடியில் (பழனியில்) அந்த இரு மலைகளை நிலைபெறச் செய்யும் பொருட்டும், முருகன் ஒரு அற்புதமான திருவிளையாடலை நடத்தினார். கயிலாயத்திலிருந்து திரும்பிய இடும்பன் வழி தெரியாமல் திகைத்தார். அப்போது அவர் முன் தோன்றிய முருகன், குதிரையில் பயணம் செய்யும் அரசனைப் போல இடும்பனுக்கு வழிகாட்டி திருவாவினன்குடிக்கு அழைத்துச் சென்றார். இடும்பனை இங்கேயே சிறிது நேரம் ஓய்வெடுத்து செல்லுமாறு கூறினார். அதனால் இடும்பனும், தான் காவடியாக தூக்கி வந்த மலைகளை இறக்கி வைத்துவிட்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு மீண்டும் புறப்படத் தயாரானார். அப்போது அந்த மலைகளை தூக்க முடியாமல் தவித்தார். செய்வதறியாமல் திகைத்தார். அப்போது சிவகிரி மேலே ஒரு சிறுவன் கோவணத்துடன், தன் கையில் தண்டுடன் நிற்பதைப் பார்த்தார். உடனே சிறுவனை மலைமீது இருந்து கீழே இறங்கும்படி வேண்டினார். மலையிலிருந்து இறங்க மறுத்த அந்த சிறுவன் இந்த மலை எனக்கே சொந்தம் என உரிமை கொண்டாடினார். இதனால் கோபமடைந்த இடும்பன், சிறுவனைத் தாக்க முயன்றார். ஆனால் முருகனின் சக்தியால் வேரற்ற மரம் போல விழுந்தார்.





இதைக் கண்ட அகஸ்தியர், இடும்பனின் மனைவியை அழைத்துச் சென்று முருகனை வழிபட்டு, இடும்பனை விடுவிக்கும்படி வேண்டினார். முருகனும் தான் நினைத்தபடி, மலைகளைத் திருவாவினன்குடியில் நிலைபெறச்செய்து, இடும்பனுக்கு அருளாசி புரிந்தார். அதோடு இடும்பனைத் தன் காவல் தெய்வமாக நியமித்தார். **"என்னை வணங்கும் முன், உன்னை வணங்கி மலையேற வேண்டும். உன்னை வணங்கினால், என்னை வணங்கிய அருள் கிடைக்கும்"** என்றும் கூறினார்.

இடும்பனுக்கு அருள் புரிந்த முருகன், இனி இடும்பனைப் போல காவடி சுமந்து சந்தனம், பால், மலர் போன்ற அபிஷேகப் பொருட்களை காவடி ஏந்தி

என் சன்னதிக்கு வந்து வழிபடுபவருக்கு, தான் நல்லருள் வழங்குவதாக வாக்களித்தார். அன்று முதல், முருக பக்தர்கள், முருகனுக்கு பல்வேறு வகையான காவடிகளை எடுத்தும், பால்குடம் எடுத்தும் வழிபட்டு வருகின்றனர்.

### காவடியும் காவடியாட்டமும்:

**"கா அடி"** என்பதே காவாகச் சுமக்கப்படும் (முருகப்பெருமானின்) திருவடி. "கா" என்பது இருபுறமும் தொங்கும் சுமை. "காவடி" என்னும் சொல் "காவுதடி" என்பது மருவி உருவானதாகக் கருதப்படுகின்றது. "காவடியாட்டம்" என்பது "காவடி", "ஆட்டம்" என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உருவானது. காவடி என்பது ஆட்டத்துக்கான கருவி என்பதால், இவ்வாட்டத்தின் பெயர் அதற்கான கருவியின் அடியாக எழுந்தது எனலாம். சுமை காவுபவர்கள் இலகுவாகச் சுமப்பதற்காக, ஒரு நீண்ட தடியின் இரு முனைகளிலும் சுமைகளைத் தொங்கவிட்டு, அத்தடியின் நடுப்பகுதி தோளில் இருக்குமாறு வைத்துச் சுமந்து செல்வர். காவுவதற்கான தடி என்னும் பொருள்பட இத்தடியைக் காவுதடி என அழைப்பர். அது மருவி **"காவடி"** என்றானது.

### காவடி கட்டும் முறை:

இரண்டரை அடி நீளமுள்ள மரத்தண்டில் இரு முனைகளிலும் சிற்ப வேலைபாடுள்ள பலகைகளைப் பொருத்தி, பின்னர் அந்த இரு பலகைகளையும் மூங்கில் பிளாச்சியால் மேல் நோக்கி அரைவட்டமாக இணைத்து, அந்த அரை வட்டப்பகுதியைப் பட்டுத்துணிகளாலும், மணியாலும் அழகுபடுத்துவர். பின்னர் இருபுறமும் உள்ள பலகைகளின் நான்கு மூலைகளிலும் மயிலிறகுக் கற்றைகளைச் சொருகுவர். மரப்பலகைகளின் இருபுறமும் கீழ்நோக்கி இரண்டிரண்டு சட்டங்களைக் காவடியைக் கீழே நிறுத்தப் பொருத்துவர். பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு சொம்புகளைக் கட்டித் தொங்கவிடுவர். இது வழிபாட்டிற்குரிய காவடியின் அமைப்பாகும்.

### காவடி விரத முறைகள்:

காவடி எடுக்க விரதங்களை மிகவும் சிரத்தையாக கடைபிடிக்க வேண்டும். புலால் உண்ணாமலும், மற்ற தீய பழக்கங்கள் இல்லாமலும் விரதம் இருக்க வேண்டும். பிறகு விரத நாட்கள் முடிந்த பிறகு, காவடிப் பூசை போட்டு காவடி கட்டுவர். காவடி கட்டிய பிறகு, அந்தக் காவடியைத் தூக்குபவர், குளித்து விட்டு தான் காவடியைத் தூக்க வேண்டும். காவடியை தோளில் வைத்த பிறகு, தண்ணீர் குடிக்கவோ, கழிப்பறையை உபயோகிக்கவோ கூடாது. அதற்கான தேவைகள் ஏற்படும் போது, காவடியை தன்னுடன் வரும் துணைக்காவடியிடம் கொடுத்துவிட்டு, தேவைகளை முடித்துக் கொண்ட பிறகு, குளித்துவிட்டு தான் மறுபடியும் காவடியைத் தூக்க வேண்டும். காவடியைத் தூக்குபவர், வேட்டிஅணிந்துதான் காவடியை தூக்க வேண்டும். முருகனுக்கு காவடியை செலுத்தும் வரை, அதே வேட்டியைத் தான், தூய்மை செய்து அணிந்து செல்ல வேண்டும்.



### காவடியின் வகைகள்:

காவடிகளில் கட்டித் தொங்கவிடப்படும் சொம்பிலுள்ள பொருட்களுக்கேற்ப காவடியானது பலவகைப்படும். ஒவ்வொரு வகைக் காவடிக்கும் ஒவ்வொரு வகையான பலன் என்று கூறப்படுகிறது. காவடியின் வகைகளைப் பற்றியும், அவற்றின் பலன்களைப் பற்றியும் பார்ப்போம்:

1. மயில் காவடி - இல்லத்தில் இன்பம் நிறையும், குடும்ப பிரச்சனைகள் நீங்கும்
2. தீர்த்தக் காவடி - பாவ, கர்ம வினைகள் நீங்கும். ஆயுள், செல்வம் பெருகும்
3. அலகுக் காவடி - திருமணத் தடை நீங்கும்
4. இளநீர்க் காவடி - சரும நோய் நீங்கும்
5. பழக் காவடி - செய்யும் தொழிலில் நலம் பெருகும், லாபம் கிடைக்கும்
6. மஞ்சள் காவடி - வாழ்வில் வெற்றி கிடைக்கும்
7. பால் காவடி - செல்வச் செழிப்பு உண்டாகும்
8. பன்னீர்க் காவடி - மனநல குறைபாடுகள் விலகும்
9. சர்க்கரைக் காவடி - சந்தான பாக்கியம் கிட்டும்
10. மலர்க் காவடி - நினைத்தது நிகழும்
11. அலங்காரக் காவடி - திருமணத் தடை நீங்கும்
12. அன்னக் காவடி - வறுமை நீங்கும்
13. கற்பூரக் காவடி - வயிறு சம்பந்தமான பிரச்சனைகள் நீங்கும்
14. வேல்க் காவடி - எதிரிகள் நம்மை பார்த்து அஞ்சி விலக
15. தங்கக் காவடி - நீடித்த புகழ் கிடைக்கும்
16. வெள்ளிக் காவடி - நல்ல ஆரோக்கியம் கிடைக்கும்
17. சந்தனக் காவடி - வியாதிகள் நீங்கும்
18. சர்பக் காவடி - குழந்தை வரம் கிடைக்கும்

19. அக்னிக் காவடி - திருஷ்டி தோஷம் மற்றும் பில்லி, சூனியம், செய்வினை நீங்கும்
20. தேர்க் காவடி - உயிர் பிழைக்க வைத்ததற்கு முருகனுக்கு நன்றி தெரிவிக்க எடுக்கும் காவடி
21. சேவல் காவடி - எதிரிகள் தொல்லை நீங்கும்
22. மச்சக் காவடி - வழக்கு விஷயங்களில் இருந்து விடுபட நேர்மையான தீர்ப்பு கிடைக்க எடுக்கும் காவடி

இதைத் தவிர, பறவைக் காவடி, சுரக்காய்க் காவடி, தானியக் காவடி, தொட்டில் காவடி, கரும்புக் காவடி, பஞ்சாமிர்தக் காவடி, மயில்க் காவடி, முள்ளு - மிதிக் காவடி, கற்கண்டுக் காவடி, காகிதப்பூக் காவடி, கூடைக் காவடி, செருப்புக் காவடி, விபூதிக் காவடி, தாளக் காவடி, பாட்டுக் காவடி, ஆபரணக் காவடி, தாழம்பூக் காவடி, மிட்டாய்க் காவடி, தயிர்க் காவடி, தேன் காவடி, அபிஷேகக் காவடி, சாம்பிராணிக் காவடி, மயில் தோகை அலங்காரக் காவடி மற்றும் ரதக் காவடி எனப் பல்வேறு வகையான காவடிகளையும், பக்தர்கள் முருகனுக்கு செலுத்துவர்.

## நகரத்தார்களும் காவடியும்:

செட்டிமகன் முருகனுக்கு காவடி எடுத்து வணங்கும் வழக்கம் நம் நகரத்தார்களிடம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. பழனி, குன்றக்குடி, சிறுவாபுரி, திருத்தணி, சுவாமிமலை போன்ற பல்வேறு முருகன் திருத்தலங்களுக்கு நம் நகரத்தார்கள் காவடி எடுப்பார்கள். அதில் பழனிக்கு காவடி எடுக்கும் முறையைப் பற்றிப் பார்ப்போம்.

செட்டிநாட்டில் பல்வேறு ஊர்களில் இருந்தும், காவடிகளை எடுத்துச் செல்வர். நகரத்தார்கள் அவரவர்களின் சொந்த ஊர்களிலிருந்து, காவடி எடுத்துச் சென்று, பழனியில் தைப்பூசத்தன்று செலுத்துவது மரபு. வெவ்வேறு ஊர்களிலிருந்து எடுத்து வரும் காவடிகள் அனைத்தும், குன்றக்குடியில் ஒன்று சேரும். பின்னர் அடுத்த நாள், “வேல்” முன்செல்ல, தொடர்ந்து அனைத்துக் காவடிகளும், பச்சைக் காவடியுடன் பழனிக்குச் செல்லும். அனைத்துக் காவடிகளையும், அரண்மனைப் பொங்கல் அய்யாவும், சாமியாடி அய்யாவும் வழிநடத்திச் செல்வர். மேலவட்டகைக் காவடிகளை, நெற்குப்பை அய்யா வழிநடத்திச் செல்வார். முருகனுக்கு காவடிகளை செலுத்தும் வரையிலும், காவடிகளுக்குத் தொடர்ந்து பூசைகள் நடத்தப்படும். அனைத்துக் காவடிகளும் குன்றக்குடியில் ஒன்று சேர்ந்த பிறகு, காவடிப் பூசைகள், மருதிப்பட்டி, சமுத்திரப்பட்டி, இடைச்சி மடம், செம்மடப்பட்டி, குழந்தை வேலன் சன்னிதி, கலிங்கப்பைய்யா ஊரணி போன்ற இடங்களில் நடைபெறும். பின்னர் காவடிகள், அன்னதான மடத்தை வந்தடையும். பின்னர் அன்னதான மடத்தில் காவடி பூசைகள் போடப்பட்டு, காவடிகள் பழனி முருகனுக்கு செலுத்தப்படும். காவடிகள் செலுத்திய பிறகு, சந்தன அபிஷேகம் செய்யப்பட்டு, கண்டனூர் ஐயாவும், அரண்மனை பொங்கல் ஐயாவும் பாகற்காய்சோறு வழங்குவார்கள். அனைத்து பக்தர்களும் அதை உண்ட பிறகு, முருகனிடம் சொல்லிக்கொண்டு, காவடிகளை வழிநடையாக அவரவர் ஊர்களுக்கு கொண்டு செல்வார்கள்.





## முடிவுரை:

இயற்கையைப் போற்றிய பழந்தமிழரிடம் இறை உணர்வு இருந்தது. இதனைப் பல சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. தமிழர்களிடம் முருக வழிபாடு என்பது மிகத்தொன்மையானது. எனவே, தனித்தமிழ்க் கடவுளாகக் காட்சி தருகின்ற முருகப் பெருமானின் அருளாட்சி சொல்வதற்கு அரியது. தெய்வங்கள் பலவாக இருந்தாலும், வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத நிலையில் காவடி எடுப்பது முருகனுக்கு மட்டும் உரிய சிறப்பாகும். அத்தகைய சிறப்பு மிகுந்த காவடியைப் பற்றியும், காவடி எடுக்கும் வழக்கம் பிறந்த வரலாறு பற்றியும், எனக்குத் தெரிந்த வரை இங்கே கோர்த்துள்ளேன். முருகனின் காவடி பற்றியும், அதன் சிறப்புகள் பற்றியும் எழுத வாய்ப்பு கிடைத்ததை நினைத்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!!**



**விசாலாட்சி முத்துராமன்**

ஆ.தெக்கூர்

என் பெயர் விசாலாட்சி முத்துராமன்.நான் மென்பொருள் பொறியாளராக வேலை பார்க்கிறேன். நான், என் கணவர் முத்துராமன் மற்றும் என் குழந்தைகள் கிருத்திகா மற்றும் கார்த்திக்குடன், நோவை, மிச்சிகனில் வசிக்கிறேன். எனக்கு தமிழ் மீது ஆர்வம் அதிகம், அதனால் நான் தமிழ்ப்பள்ளியில் தன்னார்வலராக சேவை செய்கிறேன். நாணலின் உதவி ஆசிரியராக இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.